**எஸ்.டி.சி.எண். 228/2021** **தேதி - 13.07.2023**

<u>ம.சா.1 ஆன Mr.M.Elangovan எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்</u>

இவ்வழக்கு தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டேன். வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய வேண்டி என்வசம் இல்லை. நான் 2015 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னால் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் ஆட்டோமொபைல்ஸ் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்து வந்தேன். நான் பேக்ட்ரி ஒன்று நடத்தி வந்ததாக எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றாலும் எந்த முகவரியில் அந்த பேக்ட்ரியை நடத்தி வருகிறேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நடத்தி வந்ததாக சொல்லப்பட்ட பேக்ட்ரியானது பங்குதாரர் நிறுவனமா அல்லது பிரைவேட் லிமிடெட் கம்பெனியா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்குறிப்பிட்ட பேக்ட்ரி குறித்த சங்கதிகளை நான் எனது புகாரிலும், சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடாமல் இருந்ததற்கு காரணம் ஏதும் இல்லை. அவை தேவையில்லை என்பதால் குறிப்பிடவில்லை. நான் சொல்வது போல் தொழில் நிறுவனம் எதுவும் நான் நடத்தவில்லை என்றாலும், அவ்வாறு நடத்தி வந்தால் அந்த நிறுவனம் குறித்த அனைத்து சங்கதிகளையும் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றாலும் வழக்கிற்காக தொழில் நிறுவனம் வைத்திருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலுல் சரியல்ல. நான் நடத்தி வந்ததாக கூறப்படும் தொழில் நிறுவனம் குறித்து எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அவை தேவையல்ல என்பதால் குறிப்பிடவில்லை. ஆனால் அதுகுறித்து ஆவணங்களை தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் நடத்தி வந்த தொழில் நிறுவனத்தை பொறுத்து

எனது புகாரில் குறிப்பிடாமல் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது எனது வழக்கிற்கு வலுசேர்க்கும் விதமாக உள்ளது என்றால் சரியல்ல. நான் நடத்தி வந்த தொழில் நிறுவனமானது Proprietorship நிறுவனம் ஆகும். நான் நடத்தி வந்த தொழில் நிறுவனத்தில் மாத Turn over எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 2.5 - 3 இலட்சம் வரை இருக்கும். மதிப்பு கூட்டு வரியின் சட்டத்தின் படி எனது நிறுவனத்தை நான் பதிவு செய்து வைத்திருந்தேன் என்றால் சரிதான். நான் நடத்தி வந்த நிறுவனம் தனிநபர் நிறுவனம் என்பதால் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 அன்று தொழில் கணக்கினை முடித்து வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு தொகையான ரூ.25 இலட்சம் என்பது பெரிய தொகையாகும். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தொழில் நிறுவனத்தை விற்று அதில் கிடைத்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது தொழில் நிறுவனம் விற்கப்பட்ட பணமும், மேலும் எனது மனைவியின் தங்க நகைகளை அடைமானம் வைத்ததிலிருந்து கிடைத்த பணமும், நான் எனது கிராமத்தில் உள்ள ஒரு இடத்தை விற்றதன் மூலம் கிடைத்த பணத்தை வைத்து தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். இவ்வழக்கு தொகையான ரூ.25 இலட்சம் முழுவதும் எனது தொழில் நிறுவனத்தை விற்றதன் மூலம் கிடைத்த பணமல்ல என்றால் சரிதான். எனது தொழில் நிறுவனம் விற்கப்பட்டதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது மனைவியின் நகைகளை அடைமானம் வைத்ததற்கான ரசீது ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நிலத்தை விற்று கிடைத்த பணத்திலிருந்து எதிரிக்கு தொகை கொடுத்ததாக சொல்லப்படும் சங்கதியை முதன்முதலாக எனது குறுக்கு விசாரணையின் போது தான் கூறுகிறேன் என்றாலும் அதுகுறித்து எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் கூறவில்லை

என்றாலும் சரிதான். அதற்குண்டான ஆவணம் தேவைப்பட்டால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வேன். நான் கூறுவது போல் நிதிகளை திரட்டி எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் எதிலிருந்து எவ்வளவு கிடைத்தது என்று குறிப்பிட்டு எனது புகாரில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கு ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால், கடன் கொடுக்கும் போது வாங்கவில்லை அதன் பிறகு எதிரியிடம் கேட்டு 22.05.2018 ஆம் தேதியிட்ட புரோநோட்டை பெற்றுக் கொண்டேன். நான் பணம் கொடுத்து 3 ஆண்டுகள் வரை எவ்வித செக்ட்ரிட்டி ஆவணமும் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தொழில் நிறுவனத்தில் ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாக தான் எனது தொழில் நிறுவனத்தை விற்றேன் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் நான் அதில் கிடைத்த பணத்தையும், எனது மனைவியின் நகைகளை அடைமானம் வைத்த பணத்தையும் எனது நிலம் விற்றதன் மூலம் கிடைத்த பணத்தையும் எதிரிக்கு கடனாக கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் நண்பர் என்ற முறையில் நம்பிக்கையின் பெயரில் உதவும் பொருட்டாக கடன் கொடுத்தேன். எதிரி எந்த கால கட்டத்தில் எனக்கு நண்பராக அறிமுகம் ஆனார் என்ற சங்கதியை நான் எனது புகாரில் சொல்லவில்லை என்று சொன்னால் இல்லை. 2014 ஆம் ஆண்டு எதிரி எனக்கு அறிமுகமானார். கலையரசன் என்பவர் மூலமாக எதிரி எனக்கு அறிமுகமானார். ஆனால் இந்த சங்கதியை எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரி அவருடைய குடும்ப தேவைக்காக கடன் பெற்றதாக எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதற்கு மாறாக எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் எதிரி அவரது தொழில் தேவைக்காக பணம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி குடும்ப தேவைக்காகவும்,

தொழில் தேவைக்காகவும் வேண்டி தான் என்னிடம் பணம் கேட்டார். மேற்கண்ட இரண்டு தேவைகளுக்காகவும் எதிரி என்னிடம் கடன் வாங்கியதாக நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 22.05.2018 ஆம் தேதி வரை எதிரி எனக்கு தொகை எதுவும் கொடுக்கவில்லை என்பது தான் எனது வழக்கு என்றால் இவ்வழக்கில் கண்ட ரூ.25 இலட்சத்தை பொறுத்து எதிரி எனக்கு எப்பணமும் மேற்குறிப்பிட்ட தேதி வரை கொடுக்கவில்லை. எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் இவ்வழக்கின் பரிவர்த்தனையை தவிர்த்து வேறு பரிவர்த்தனை எதுவும் எனக்கும் எதிரிக்கும் இடையே இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் இவ்வழக்கு தொகையான ரூ.25 இலட்சத்திற்கு மட்டும் வழக்கு தொடுத்துள்ளதால் வேறு பரிவர்த்தனையை குறித்து சொல்லவில்லை. எனக்கும் எதிரிக்கும் இவ்வழக்கு பொறுத்தோ அல்லது வேறு பரிவர்த்தனை பொறுத்தோ ரூ.25 இலட்சம் பரிவர்த்தனையும் எந்த காலத்திலும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. பொதுவாக இவ்வளவு பெரிய தொகை கடனாக கொடுக்கப்படும் போது கடன் பெறும் நபரின் பணத்தை திரும்ப செலுத்தும் தன்மையை பார்த்தும், அவரது வியாபார தன்மையை பார்த்தும் தான் கடன் கொடுக்கப்படும் என்றால் அவர் தொழிலுக்கு நம்பிக்கையின் அடிப்படையில் நான் பணம் கொடுத்தேன். நான் எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எதிரி நடத்தும் ரியல் எஸ்டேட் தொழிலின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் அடிக்கடி அவரது அலுவலக இடத்தை மாற்றி அலுவலகத்தின் பெயரையும் மாற்றி வந்ததால் அதுகுறித்து நான் சொல்லவில்லை. நான் மேற்குறிப்பிட்டவாறு எதிரி அடிக்கடி அவரது தொழிலுக்கு பெயரையும், முகவரியையும் மாற்றி வரும் நிலையில் அவருக்கு நான் ரூ.25 இலட்சம் தொகை கொடுத்ததாக சொல்லப்படுவது

நம்பும் வகையில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் பணம் கொடுத்ததற்கு பின்பு தான் அவர் அடிக்கடி அலுவலகத்தையும், தொழிலின் பெயரையும் மாற்றும் பழக்கம் உள்ளவர் என்பதை தெரிந்து கொண்டேன். மேற்குறிப்பிட்ட சங்கதியை எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக புது சங்கதிகளை நான் பொய்யாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது புகாரில் தலைப்பில் எதிரியின் பெயருக்கு கீழ் மினி பவுண்டேசன் டிரஸ்ட் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரிந்தவரை அதுதான் எதிரி கடைசியாக இருந்த முகவரி ஆகும். மினி பவுண்டேசன் டிரஸ்ட் இல் எதிரி என்னவாக இருந்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அவரது முகநூல் பக்கத்தில் சேர்மன் என்று போட்டிருந்தார். மேற்குறிப்பிட்ட பதிவை நான் புகாரில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியை பாஸ்கர், மினி பவுண்டேசன் டிரஸ்ட் என பெறுநர் பகுதியில் குறிப்பிட்டுள்ளதால் அந்த அறிவிப்பானது முறைப்படியான அறிவிப்பு இல்லை என்றால் சரிதான். நான் மினி பவுண்டேசன் டிரஸ்டை எதிரியாக சேர்க்கவில்லை என்றாலும், அந்த டிரஸ்டிற்கு அறிவிப்பு ஏதேனும் அனுப்பவில்லை என்று சொன்னால் எதிரி அந்த முகவரியில் இருந்ததற்காக நான் முகவரியின் தொடர்பாக அந்த டிரஸ்ட்டை குறிப்பிட்டுள்ளேன். மேற்படி இந்த வழக்கிற்கும் அந்த டிரஸ்ட்டிற்கும் சம்மந்தமில்லை. எதிரிக்கு கடன் கொடுத்த தொகை ரூ.25 இலட்சத்தை நான் வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை அதுகுறித்து தெரியாததால் அதை காண்பிக்கவில்லை. எதிரிக்கு ரூ.25 இலட்சம் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றாலும் , அவ்வாறு இருந்திருந்தால அதனை நான் வருமான வரி கணக்கில் காண்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எதிரிக்கு

கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தொகை பணமாக கொடுக்கப்பட்டதா அல்லது வங்கி மூலம் செலுத்தப்பட்டதா என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் ரொக்கமாக தான் கொடுத்தேன். அதன் விவரத்தை எனது வழக்கறிஞரிடம் கூறியிருந்தேன். எனக்கு அடிப்படையாக ஆங்கிலம் எழுத படிக்கத் தெரியும், சரளமாக தெரியாது. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த புகார், பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றை படித்து தான் கையொப்பம் செய்தேன். நான் எனது புகார் வழக்கறிஞர் அறிவிப்பையும் படித்து பார்க்கும் போது பணம் ரொக்கமாக தான் கொடுக்கப்பட்டது என்ற சங்கதி குறிப்பிடத் தேவையில்லை என்று நினைத்து நான் விட்டுவிட்டேன். நான் உண்மையில் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தேன் என்றால் அது எந்த வகையில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரை அணுகி பணம் கேட்கும் போதெல்லாம் நட்பு ரீதியாக கொடுத்துவிடுகிறேன் என்று கூறியதால் அதனால் அவர் மீது புகார் எதுவும் நான் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்த தேதியில் என்னை அணுகி பணம் கேட்டார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் எதிரி கேட்ட தொகையை எவ்வளவு நாளில் ஏற்பாடு செய்தேன் என்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது தொழில் நிறுவனத்தை விற்ற போது அதற்குண்டான தொகையை சிறுக சிறுக ரொக்கமாக பெற்றேன். நான் எந்தெந்த தேதியில் ரொக்கமாக எனது தொழில் நிறுவனத்தை விற்றதன் பணத்தை பெற்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது என் தனிப்பட்ட விஷயம் என்பதால் அதுகுறித்து சொல்லவில்லை. நான் செய்து வந்தது குறுந்தொழில் என்பதால் மிஷனரிகளை விற்றுவிட்டேன் விற்றதற்கு ஆவணம் எதுவும் பதிவு செய்யவில்லை. நான் எனது மிஷனரிகளை விற்ற போது முறையாக

பில்லிங் செய்து விற்றேனா என்றால் அது என்னுடைய தனிப்பட்ட விஷயம். நான் உண்மையில் மிஷனரிகளை விற்றிருந்தால் பில்லிங் செய்ததால் விற்றிருக்க வேண்டும் என்றாலும் அதுகுறித்து சேல்ஸ் டேக்ஸ் யிலும் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் சரியல்ல. எனது நிறுவனம் எந்த விற்பனை வரி வட்டத்திற்குள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அயனாவரம் சர்க்கில் ஆகும். அதன் பிறகு வேறு எங்கும் மாறியதா என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகமில்லை. எனது நிறுவனத்தின் பெயர் அடங்கிய வேட் சர்டிபிகேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் எனது நிறுவனத்தை விற்ற பிறகு என் நிறுவனத்தின் நம்பரை நான் சரண்டர் செய்தேன் என்று கடிதம் ஏதேனும் எனது அசஸ்மெண்ட் சர்க்கிலுக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. கடன் கொடுத்த தேதியிலிருந்து காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதி வரை ஒவ்வொரு ஆண்டு வருமான வரி கணக்கிலும் எதிரி எனக்கு கொடுக்க வேண்டியதாக உள்ள ரூ.25 இலட்சத்தை நான் வாரா கடனாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.4ல் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.4ல் ஒருவர் தான் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். சாட்சி கையொப்பம் செய்த நபரின் தந்தை பெயர், விலாசம், ஆதார் எண் முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த சாட்சி எனக்கும் எதிரிக்கும் பொதுவான நண்பர் தான். 2 சாட்சிகள் கையொப்பம் செய்யாத நிலையில் ம.சா.ஆ.4 செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.4ல் கண்ட முதல் பக்க எழுத்துகளும் இரண்டாம் பக்க எழுத்துகளிலும் Font size வேறுபட்டு காணப்படுகிறது என்றால், முதல் பக்கம் என்பதால் Font size சற்று பெரியதாக காணப்படுகிறது. பூர்த்தி செய்யப்படாத முத்திரை தாளான ம.சா.ஆ.4ல் எதிரியிடம் கையொப்பம் மட்டும் வாங்கி வைத்திருந்த ஆவணங்களை வழக்கிற்காக தவறாக

பயன்படுத்தியுள்ளேன் என்றாலும், அதனால் தான் 2ம் பக்கத்தில் எதிரி செய்த கையொப்பத்திற்கு உள்ளாகவே உள்ளடக்கங்கள் வர வேண்டி ம.சா.ஆ.4 யினை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆனது நோட்ரியிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் இல்லை.

எதிரிதரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- (Tmt.A.Theviya),
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

//True Copy//
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.